23rd November 1963]

மைக்கா

* 519 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், புலிவலம் காட்டில் மைக்கா கிடைப்பது சர்க்காருக்கு தெரியுமா ?

(இ) அப்படியானல் அதுபற்றி பரிசிலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

* 520 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware that (occurrence) of Mica was found while digging a well in Valliyur village in Nanguneri taluk in Tirunelveli district ; and

(b) if so, whether further investigation has been taken up in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No Sir.

(b) Does not arise.

பிச்சையெடுப்பு ஒழிப்பு

* 521 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா தலைநகரங்களில் உலவும் பிச்சைக்காரர்களை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) பொதுவாக பிச்சை எடுப்பதைக் குற்றமாக்கச் சட்டம் கொண்டு வர உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) சென்னை 1945-ம் ஆண்டு பிச்சைத் தடுப்புச் சட்டத்தின் ஷரத்துக்கள் பெரும்பாலான ஜில்லாத் தலைநகரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அப் பகுதிகளிலே, பொது இடங்களில் பிச்சை எடுக்கும் நபர்களை நீதி மன்றத்தார் தண்டித்து விசேஷ (பிற்காப்பு இல்லங்கள்) விடுதியில் அல்லது பணிமனைகளில் சேர்ப்பிக்கின்றனர்.

(இ) சென்னை 1945-ம் ஆண்டு பிச்சைத் தடுப்புச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள இடங்களில் அச்சட்டத்தின் 3-வது பிரிவுப்படி, பொது இடங்களில் பிச்சை எடுப்பது ஏற்கனவே குற்றமாகக் கருதப்படுகிறது. மேற்படி குற்றத்திற்கு 50 ரூபாய் அபராதம் அல்லது ஒரு மாதம் வரை காவல் தண்டனை விதிக்கப்படுகிறது.